# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2015 ஜுன் திங்கள் 30–ம் நாள் (30.06.2015) செவ்வாய்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

முன்னிலை:
நகர்மன்ற தலைவர்
குளச்சல் நகர்மன்றம்.

**பொருள் எண். 1**
**<u>தமிழ்நாடு மின்சார வாரியம் தொடர்பாக நகர்மன்றத் தலைவர் அவர்கள் கொண்டு வரும் தீர்மானம்.</u>**

குளச்சல் நகராட்சியில் சுமார் 35,000 மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கு தங்கு தடையின்றி சீரான குடிநீர் வழங்குவதற்கும், பொதுமக்களின் அடிப்படை வசதிகளில் ஒன்றான தெருவிளக்குகள் அமைப்பதற்கும், மின்சாரம் முக்கிய பங்கு வகிக்கிறது. மேற்காணும் இரண்டு அடிப்படை தேவைகளின் காரணங்களுக்காகத் தான் நகராட்சியால் மின்சாரம் செலவு செய்யப்பபட்டு வருகிறது. நகராட்சி நிர்வாகம் என்பது நகர மக்களின் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்வதை கடமையாக கொண்டுள்ளது. இந்நிலையில் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் 2015–ம் ஆண்டிற்கு கூடுதல் வைப்புத் தொகையாக ரூ.1,92,990/– ஐ செலுத்த கேட்டு கேட்பு பெறப்பட்டுள்ளது. குளச்சல் நகராட்சி நிர்வாகம் தெருவிளக்கு வசதி மற்றும் குடிநீர் வினியோகம் ஆகியவற்றை ஒரு பொது நல நோக்குடனும், பொதுமக்களின் அடிப்படை மற்றும் வாழ்வாதார உரிமைகளை பெற்றுத் தரும் நோக்குடனும் செயல்படும் பொதுத்துறை நிர்வாகம் ஆகும். தனியாரால் லாபம் ஈட்டுகின்ற நோக்குடன் செயல்படுகின்ற கம்பெனி அல்ல. எனவே இதுபோன்ற கூடுதல் வைப்புத் தொகையினை செலுத்தும் அளவிற்கு நிர்வாகத்தில் போதிய வருவாய் இல்லாத காரணத்தால் மேற்காணும் கூடுதல் வைப்புத் தொகை செலுத்துவதை ரத்து செய்திட மாவட்ட நிர்வாகம், தமிழ்நாடு மின்சார வாரியம், சென்னை மற்றும் கண்காணிப்பு பொறியாளர், நாகர்கோவில் ஆகியோரை நடவடிக்கை மேற்கொள்ள கேட்டு மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண் : 1226 – ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

2015–16 ஆம் ஆண்டுக்கு தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம், கோயம்புத்தூர் –க்கு செலுத்த வேண்டிய பங்கீட்டு தொகை ரூ.50,000/–க்கு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். சி1/3947/2011)

**தீர்மான எண் : 1227 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சிக்கு 2015–16 ஆம் ஆண்டிற்கு தேவையான படிவங்கள், பதிவேடுகள் மற்றும் கணினி பிரிவிற்கு தேவையான எழுது பொருட்கள் வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ.5,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டடப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/936/2010)

**தீர்மான எண் : 1228 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 4**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல், துறைமுகத்தெரு பெட்ரோல் பங்க் எதிர்புறம் க.எண்.18/4–ன் அருகில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,70,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1193 நாள் 23.04.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 28.05.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.S.ஜாண்றோஸ் ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. |
| 2. | திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.07% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.S.ஜாண்றோஸ், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டைவிட 0.04% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். இ1/874/2015)

**தீர்மான எண் : 1229 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 5**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.13, 14–ல், சைமன்காலனி பாலம் அருகில் Chain link fencing அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,40,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1194, நாள் 23.04.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 28.05.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.சுகுமாரன், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.17% குறைவு. |
| 2. | திரு. C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.69% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.T.சுகுமாரன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.17% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். இ1/875/2015)

**தீர்மான எண் : 1230 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 6**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24–ல், காமராஜர் சாலையில் இசக்கியம்மன் கோயில் அருகில் உள்ள குறுக்கு தெருவில் பக்க சுவருடன் கூடிய சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.80,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1198 நாள் 23.04.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 28.05.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T. சுகுமாரன், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |
| 2. | திரு. C.தேவராஜ், ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.07% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.T.சுகுமாரன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். இ1/877/2015)

**தீர்மான எண் : 1231 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.12–ல், க.எண்.13–68–ன் பின்புறம் அமைந்துள்ள நகராட்சி கிணற்றில் மேல்மூடி அமைக்கவும், Anti Sea Erosion துறையால் போடப்பட்டுள்ள கற்களை ஜே.சி.பி. மூலம் அகற்றி, மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைக்கவும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,60,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1195 நாள் 23.04.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 28.05.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.சுகுமாரன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.07% குறைவு. |
| 2. | திரு. C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.16% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.T.சுகுமாரன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.07% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். இ1/318–1/2015)

**தீர்மான எண் : 1232 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் செயல்முறைகள் எண்.ஆ3/4398/2014 நாள் 29.04.2015–ன் படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட பீச் கிழக்கு பகுதியில் பயணிகள் நிழற்கூடம் கட்டும் பணியினை ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 28.05.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.பாலகிருஷ்ணன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.06% குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.53% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.06% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/580/2015)

**தீர்மான எண் : 1233 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17–ல், கணியாகுடி முதல் பள்ளிவிளாகம் வரை மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/–க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.1177 நாள் 23.04.2015–ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் 28.05.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.P.பாலகிருஷ்ணன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.01% குறைவு. |
| 2. | திரு.C.சந்திரசேகர்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.08% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.P.பாலகிருஷ்ணன், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.01% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/357/2015)

**தீர்மான எண் : 1234 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15–ன் கீழ், இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில் ரூ.250.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவிலான பத்திரிக்கைகளான Deccan Chronicle (ஆங்கிலம்) மற்றும் டாக்டர் நமது எம்.ஜி.ஆர். (தமிழ்) ஆகியவற்றின் 15.05.2015–ம் தேதிய பதிப்பில் வெளியிட்ட வகையில் ரூ.50,259/–ஐ ரவி பப்ளிசிட்டி சர்வீஸ், சென்னை நிறுவனத்திற்கு வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2861/2014)

**தீர்மான எண் : 1235 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 11**

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் குடிநீர் பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் சுகாதாரப் பிரிவிலிருந்து 10 சுகாதாரப் பணியாளர்களை கொண்டு குடிநீர் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் 21 எண்ணம் ஆழ்துளை கிணறுகளிலிருந்து 10 எண்ணம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் ஏற்றப்பட்டு தினமும் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தினமும் 143 வால்வுகள் Operate செய்யப்பட்டும், 5 எண்ணம் ஜெனரேட்டர்கள் இயக்கப்பட்டும் வருகிறது. மேலும் குடிநீர் மூலம் பரவும் நோய்களை தடுப்பதற்காக மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை சுத்தம் செய்வதற்கும், வால்வு பிட்டுகளை சுத்தம் செய்வதற்கும், நீர்நிலைகளை சுத்தமாக வைப்பதற்கும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனுமதித்துள்ள தினக்கூலி அடிப்படையில் 4 பணியாளர்களை 89 நாட்களுக்கு (மே மாதம் முதல் ஜுலை மாதம் வரை) பணிக்கு அமர்த்திட ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. 1,20,000/– க்கு 30.04.2015–ல் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.

| | | |
|---|---|---|
| 1. | திரு.T.சுகுமாரன்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டு விகிதம்.<br>(ரூ.330/– ) |
| 2. | திரு. C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.61% அதிகம்.<br>(ரூ.332/– ) |

அவசர அவசிய குடிநீர் விநியோக பணி மேற்கொள்ளும் பொருட்டு, 30.04.2015–ல் நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : குடிநீர் விநியோகப் பணியின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதிவழங்கலாம்

**தீர்மான எண் : 1236 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சிக்கு சொந்தமான பொதுசுகாதாரப் பிரிவு Ape-porter எண். TN-75-P.8399 வாகனத்தில் கியர்பாக்ஸ் பழுது ஏற்பட்டு ஆயில் கசிவு ஏற்பட்டு வாகனம் இயக்க முடியாத நிலையில் மார்த்தாண்டம் பாரத்வீல்ஸ் நிறுவனத்தில் பணிகள் மேற்கொண்ட வகையில் ரூ.6,625/– மேற்படி நிறுவனத்திற்கு பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/1406/2014)

**தீர்மான எண் : 1237 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 13**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் கதவு எண்.11/80.எ. குடிநீர் குழாய் இணைப்பு எண்.1378, தற்போது கட்டிட உரிமையாளர் வசிக்காத காரணத்தால், மேற்படி கட்டிடத்தின் குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்யுமாறு மனுதாரர் திரு.ஜஸ்டின் என்பவர் கேட்டுள்ளார். மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டண வரி நிலுவை இல்லை. எனவே மேற்படி கட்டிடத்தின் குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்வது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1138/2015)

**தீர்மான எண் : 1238 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 14**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெருவில் கதவு எண்.19/51, குடிநீர் குழாய் இணைப்பு எண்.1700, தற்போது கட்டிட உரிமையாளர் வசிக்காத காரணத்தால், மேற்படி கட்டிடத்தின் குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்யுமாறு மனுதாரர் திரு.பெபியான்ஸ் என்பவர் கேட்டுள்ளார். மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டண வரி நிலுவை இல்லை. எனவே மேற்படி கட்டிடத்தின் குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்வது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1163/2015)

**தீர்மான எண் : 1239 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 15**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.1, கதவு எண்.2/3, குடிநீர் குழாய் இணைப்பு எண்.149 தற்போது கட்டிட உரிமையாளர் வசிக்காத காரணத்தால் மேற்படி கட்டிடத்தின் குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்யுமாறு மனுதாரர் திரு.ஜெயசந்திரா தாம்சன் ஜேக்கப் என்பவர் கேட்டுள்ளார். மேற்படி கட்டிடத்திற்கு சொத்துவரி மற்றும் குடிநீர் கட்டண வரி நிலுவை இல்லை. எனவே மேற்படி கட்டிடத்தின் குடிநீர் குழாய் இணைப்பை தற்காலிகமாக துண்டிப்பு செய்வது குறித்து மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/1165/2015)

**தீர்மான எண் : 1240 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 16**

இந்நகராட்சிக்குட்பட்ட 18–வது வார்டில் வாய்க்கால் தெருவில் க.எண்.18–142/3–ன் முன்பக்கம் அமைந்துள்ள மின்கம்பத்தில் புதிதாக மின்விளக்கு அமைக்க 18–வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சாதிக் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். மேற்படி இடத்தில் மின்விளக்கு அமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ2/4378/2010)

**தீர்மான எண் : 1241 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 17**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் வணிக வளாகத்தில் ரூ. 2,53,63,000/– மதிப்பீட்டில் ''மீன் பதப்படுத்துதல் மற்றும் சிறப்பங்காடி திட்டத்திற்கான மதிப்புக்கூட்டு பயிற்சி அளித்தல்'' பணிக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள விவரம் இந்நகர்மன்றத் தீர்மானம் எண்.1140 நாள் 31.03.2015–ன் மூலம் ஏற்கனவே மன்றத்தால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 02.06.2015–ல் சிப்பம் முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| சிப்பம் எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) | ஒப்பந்தத்தாரர் பெயர் (ம) முகவரி | ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | <u>கட்டிடம்</u><br>1) நவீன மீன்சந்தை கட்டுதல்.<br>2) குளிர்சாதன சேமிப்பு அறை அமைத்தல்.<br>3) மீன் சந்தையில் குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் மேற்கொள்ளுதல். (கழிவறை மற்றும் ஓய்வறைகள் அமைத்தல்)<br>4) மீன்சந்தையில் வடிகால் ஓடை மற்றும் மேல்மூடி அமைத்தல். | 120.00<br>30.00<br>25.00<br><br>15.00 | 1) திரு.எம்.வர்க்கீஸ் A-10,ஆசாரிப்பள்ளம், நாகர்கோவில்.<br><br>2) திரு.வி. ராஜபிரவின் 13–14A, கீழஆசாரிப்பள்ளம், நாகர்கோவில். | மதிப்பீட்டைவிட 12.09% அதிகம். (ரூ.20413636/–)<br><br>மதிப்பீட்டைவிட 30.19% அதிகம். (ரூ.23710447/–) |
| | மொத்தம் | **190.00** | | |
| II | மீன் கழிவிலிருந்து 10 கிலோ வாட் திறன் கொண்ட மின்சக்தி அமைப்பு நிறுவுதல். | 15.00 | 1) திரு.எ.பாலாஜி 5-17A, நாமக்கல், சேலம்.<br><br>2) M/s.சுந்தரம் பேப், 5–38A, ராசிபுரம் (தாலுகா) நாமக்கல், சேலம். | மதிப்பீட்டைவிட 7.09% அதிகம். (ரூ.1514215/–)<br><br>மதிப்பீட்டைவிட 4.51% அதிகம். (ரூ.1477714/–) |
| III | 30 கிலோ வாட் திறன் கொண்ட சூரிய ஒளி மின்சக்தி அமைப்பு நிறுவுதல். | 30.00 | 1)M/s.MAS Solar System (P) Ltd. 153, SIDCO Industrial Estate, Coimbatore.<br><br>2) M/s.Sree Ram Engg. Coimbatore.<br><br>3)M/s.Solariz Green Power Pvt. Ltd., 16.VGN Avenue, Mogappour, Chennai.<br>4) M/s. M.G. Solar Powertronics<br><br>5) M/s.Arka Green Power (P) Ltd. | மதிப்பீட்டைவிட 20.97% குறைவு. (ரூ.2371000/–)<br><br>தொழில் நுட்ப தகுதி பெறப்பட வில்லை.<br><br>மதிப்பீட்டைவிட 5.00% குறைவு. (ரூ.2850000/–)<br>தொழில் நுட்ப தகுதி பெறப்பட வில்லை.<br>தொழில் நுட்ப தகுதி பெறப்பட வில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| IV | 250 கிலோ வாட் திறன் கொண்ட டீசல் ஜெனரேட்டர் நிறுவுதல். | 15.00 | 1)M/s.Madras Power Corporation, No.1/15, NSC Bose Nager, Diamond Street,Chennai 2)M/s.JaypeeElectricals, S.No.338/A1, Papparambakkam village, Tiruvallar Dist. | மதிப்பீட்டைவிட 26.72% அதிகம். (ரூ.1900800/–) மதிப்பீட்டைவிட 34.34% அதிகம். (ரூ.2015100/–) |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட கூடுதல் விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சிப்பம் எண்.1, II மற்றும் IV–க்கான ஒப்பந்தத்தாரர்களிடம் விலை விகிதத்தை குறைத்து வழங்க கேட்டு கடிதம் (Negotiation letter) அனுப்பப்பட்டதற்கு,

சிப்பம் எண்.1–க்கு மதிப்பீட்டைவிட 12.09% அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.எம்.வர்க்கீஸ், ஒப்பந்தத்தாரர் Negotiation–ஐ ஏற்று மதிப்பீட்டைவிட 4.98% (ரூ.1,91,18,870.40) கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளார். மேலும் தற்போது வெளி மார்க்கெட்டில் பொருட்களின் விலை உயர்வு காரணமாகவும், அரசு நிர்ணயித்துள்ள கூலியை விட, அதிகமாக வேலையாட்களுக்கு கூலி வழங்க வேண்டியுள்ளதாலும், இதற்கு மேல் விலை விகிதத்தை குறைக்க இயலாது எனவும் தெரிவித்துள்ளார்.

சிப்பம் எண்.1I–க்கு, மதிப்பீட்டைவிட 4.51% அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.சுந்தரம் பேப், நாமக்கல் நிறுவனம், ஏற்கனவே அளித்துள்ள விலை விகித (ரூ.1477714/–) ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும், அதற்கு மேல் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளது.

சிப்பம் எண்.1V–க்கு, மதிப்பீட்டைவிட 26.72% அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s.Madras Power Corporation, Chennai நிறுவனம் Negotiation –ஐ ஏற்று மதிப்பீட்டைவிட 4.93% (ரூ.15,74,000/–) அதிகமாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ளது. மேலும் இதற்கு மேல் விலை விகிதத்தை குறைக்க இயலாது எனவும், மேற்படி தொகையானது வினியோகத்திற்கு மட்டும் எனவும் தெரிவித்துள்ளது.

எனவே சிப்பம் எண்.1II–க்கு, M/s.MAS Solar System (P) Ltd., Coimbatore நிறுவனம் மதிப்பீட்டைவிட 20.97% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது தொடர்பாகவும், நகராட்சி பொறியியல் துணை விதி பிரிவு (2.7.2)–ன் படி, மதிப்பீட்டைவிட கூடுதல் விலை விகிதத்தில் ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள சிப்பம் எண்.1, II (ம) IV–க்கான ஒப்பந்தத்தாரர்களின் Negotiation–ஐ ஏற்று, மதிப்பீட்டைவிட கூடுதலான விலை விகிதத்திற்கு பணி உத்தரவு வழங்கவும், அதற்கான கூடுதல் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், தொழில் நுட்ப தகுதி பெறாத ஒப்பந்தப்புள்ளிகளை ரத்து செய்யவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.குறிப்பு :

இந்நகராட்சியின் வளர்ச்சியில் மேற்படி பணிகளின் முக்கியத்துவதத்தை கருத்தில் கொண்டு, நகராட்சி பொறியியல் துணை விதி பிரிவு (2.7.2)–ன் படி சிப்பம் எண்.1, II மற்றும் IV–க்கான பணிகளுக்கு சம்மந்தப்பட்ட ஒப்பந்தத்தாரர்கள் அளித்துள்ள Negotiation –ஐ ஏற்று மதிப்பீட்டை விட அதிகமான விலை விகிதத்திற்கு பணி உத்தரவு வழங்கவும், அதற்கான கூடுதல் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், தொழில் நுட்ப தகுதி பெறாத ஒப்பந்தப்புள்ளிகளை ரத்து செய்யவும், மேலும் சிப்பம் எண்.1II-க்கு, M/s.MAS Solar system (P) Ltd., Coimbatore நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டைவிட20.97% குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2861/2014)

**தீர்மான எண் : 1242 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. கூடுதல் தொகையினை பொதுநிதியில் செலவு செய்திடவும், குறைவான ஒப்பந்தப்புள்ளிக்குபணி உத்தரவு வழங்கிடவும் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 18**

இந்நகராட்சிக்குட்பட்ட துறைமுகத்தெரு போர் வெற்றிச்சின்னம் அருகில் பழுதடைந்த நிலையில் உள்ள 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,00,000/—க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.995 நாள் 26.08.2014—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் பின்னர் திருநெல்வேலி மண்டல செயற்பொறியாளரின் நேராய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி, மேற்படி பணிக்கு ரூ.2,30,000/—க்கு மறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 11.06.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. |
| 2. | திரு. C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.12% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** :

(1) மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மறு மதிப்பீட்டுத் தொகை ரூ.2,30,000/—க்கு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2) திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2177/2014)

**தீர்மான எண் : 1243 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 19**

இந்நகராட்சிக்குட்பட்ட காமராஜர் பேருந்து நிலையம் அருகில் பழுதடைந்த நிலையில் உள்ள 2 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியை இடித்து அப்புறப்படுத்தும் பணிக்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,80,000/—க்கு, இந்நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.993 நாள் 26.08.2014—ன் மூலம் ஏற்கனவே ஒப்புதல் அளித்துள்ளது. அதன் பின்னர் திருநெல்வேலி மண்டல செயற்பொறியாளரின் நேராய்வு அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின்படி, மேற்படி பணிக்கு ரூ.3,50,000/—க்கு மறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 11.06.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.04% குறைவு. |
| 2. | திரு. C.தேவராஜ்,<br>ஒப்பந்தத்தாரர் | மதிப்பீட்டைவிட 0.22% அதிகம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** :

(1) மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட மறு மதிப்பீட்டுத் தொகை ரூ.3,50,000/—க்கு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2) திரு.C.செல்லநாடார், ஒப்பந்தத்தாரர் மதிப்பீட்டை விட 0.04% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/2176/2014)

**தீர்மான எண் : 1244 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 20**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2–ல், பர்னட்டிவிளை பகுதியில் அமைந்துள்ள மழைநீர் வடிகால் ஓடையின் தளம் (தரைப் பகுதி) சேதமடைந்து மேடும், பள்ளமுமாக உள்ளதால், மழைநீர் சீராக செல்ல முடியாமல் தேங்கி உள்ளது. எனவே மேற்படி வடிகால் ஓடையின் தளத்தை சரி செய்து, மூடு சிலாப் அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.1,50,000/– க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/1431/2015)

**தீர்மான எண் : 1245 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 21**

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 40 வாட்ஸ் குழல் விளக்குகள் 1261 எண்ணம், 250 வாட்ஸ் சோடியம் விளக்குகள் 37 எண்ணம், 36 வாட்ஸ் சி.எப்.எல். விளக்குகள் 185 எண்ணம், எல்.இ.டி. விளக்குகள் 87 எண்ணம், உயர்கோபுர மின் விளக்கு 1 எண்ணம், சிறிய உயர்கோபுர மின் விளக்குகள் 4 எண்ணம், மற்றும் தானியங்கி சுவிட்சுகள் 23 எண்ணம் என ஆக மொத்தம் 1575 தெரு விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேற்படி தெரு விளக்குகளின் 2015–16–ம் ஆண்டு வருடாந்திர பராமரிப்பிற்கு தேவையான மின் உதிரி பாகங்களை கொள்முதல் செய்வதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.7,00,000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.இ1/1167/2015)

**தீர்மான எண் : 1246 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 22**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.5 கொட்டில்பாடு பகுதியில் அமைந்துள்ள பொதுக் கழிப்பிடம் பொதுமக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் மிகவும் மோசமாக சேதமடைந்து, செடி கொடிகள் வளர்ந்த நிலையில் உள்ளதால், அவற்றிலிருந்து விஷ பூச்சிகள் அருகில் உள்ள குடியிருப்புகளுக்குள் சென்று பொதுமக்களுக்கு பாதுகாப்பற்ற சூழலை ஏற்படுத்தியுள்ளது. மேலும் மேற்படி இடத்தின் அருகாமையில் அங்கன்வாடி மையம் செயல்பட்டு வருவதாலும், பொது நலன் கருதி மேற்படி கழிப்பிடத்தை இடித்து அப்புறப்படுத்தி, தடுப்பு வேலி அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.80,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1421/2015)

**தீர்மான எண் : 1247 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 23**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரிச் சந்தை வளாகத்தில் அமைந்துள்ள கவியரசு கண்ணதாசன் வணிக வளாக கடை எண்.28–ஐ வாடகைக்கு கேட்டு திரு.கிங்சிலி மில்ட்டன் ராஜ் என்பவர் கோரியுள்ளார். கடையினை நகராட்சி குத்தகை விதிகளின்படி மாத வாடகைக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். மேற்படி கடையினை நகராட்சி சார்பில் பலமுறை ஏலம் விட்டும் எவரும் ஏலம் கோர முன்வரவில்லை. ஆகவே நகராட்சி வருவாய் இழப்பை தவிர்க்க கடையினை மாத வாடகைக்கு வழங்க அனுமதிக்கலாம். (ந.க.எண்.அ1/2035/2015)

**தீர்மான எண் : 1248 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 24**

இந்நகராட்சியில் அமைந்துள்ள தினசரிச் சந்தை வளாகத்திலுள்ள கடைகள், தரைப்பாக கடைகள் மற்றும் நுழைவு கட்டணம் வசூல் செய்வதற்கு 2014–15–ம் ஆண்டுக்கு ரசீதுகள் அச்சடித்த வகையில் தாசன் ஆப்செட், குளச்சல் அவர்களுக்கு ரூ.26,600/– வழங்க கோரியுள்ளார். மேற்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.அ1/336/2015)

**தீர்மான எண் : 1249 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 25**

இந்நகராட்சிக்கு சொந்தமான கலைஞர் கருணாநிதி வணிக வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு மின்சார வாரிய அலுவலகத்தில், மின் பயனீட்டாளர்கள் மின்கட்டணம் செலுத்துவதற்கு வசதியாக நிழல் பந்தல் அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.60,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/1411/2015)

**தீர்மான எண் : 1250 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 26**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22–ல், பந்தவிளை குறுக்கு தெருவில் க.எண்.111/1–ன் முன்புறம் வடிகால் ஓடை இல்லாததால், மழைநீர் மற்றும் குடியிருப்புகளிலிருந்து வரும் கழிவுநீர் ஆகியவை சாலையின் மேற்பரப்பில் வழிந்தோடும் நிலை காணப்படுகிறது. இதனால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதுடன், சாலையும் சேதமடையும் நிலை உள்ளது. எனவே மேற்படி பகுதியில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைப்பதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.1,60,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1443/2015)

**தீர்மான எண் : 1251 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 27**

இந்நகராட்சிக்குட்பட்ட சிங்கன்காவு சாலையில் அமைந்துள்ள வடிகால் ஓடையின் அடிப்பகுதி (Vent Portion) உடைந்து மேடும், பள்ளமுமாக உள்ளதால், தண்ணீர் சீராக செல்ல முடியாமல் தேங்கி, சுகாதார சீர்கேடு ஏற்படும் சூழ்நிலை உள்ளது. மேலும் மேற்படி வடிகால் ஓடையில் மழைநீர் நிரம்பி சாலையில் மேற்பரப்பில் வழிந்தோடுவதால், சாலை சேதமடையும் நிலையில் உள்ளது. எனவே பொதுநலன் கருதி, வடிகால் ஓடையின் அடிப்பகுதி மற்றும் பழுதடைந்துள்ள பக்க சுவர்களை சரி செய்வதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/636/2015)

**தீர்மான எண் : 1252 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 28**

இந்நகராட்சியின் மார்க்கெட் பகுதியிலுள்ள ஆக்கிரமிப்பு அகற்றுதல் தொடர்பாக இந்நகராட்சியின் மீது திரு.ஜஸ்டின் செல்வகுமார் என்பவர் இரணியல், கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தொடர்ந்த (வழக்கு எண்.O.S.No.218/11) வழக்கின் 23.01.2015 அன்று நகராட்சிக்கு ஆதரவாக தீர்ப்பாகி உள்ளது. மேற்படி வழக்கில் 1.A-391/11, 1.A-94/2, 1.A-424/13, 1.A-421/13, 1.A-423/14, 1.A-422/13, Written Statement மற்றும் Addl.Written Statement ஆகியவை முடிவு செய்யப்பட்டுள்ளது. இவற்றிற்கான வழக்கு கட்டணம் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) கேட்டு திரு.A.N.லிவிங்ஸ்டன், வழக்கறிஞரிடமிருந்து கடிதம் வரப்பெற்றதால் மேற்படி தொகையினை வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.tpi/6982/2011)

**தீர்மான எண் : 1253 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 29**

இந்நகராட்சிக்குட்பட்ட 3–வது வார்டு சன்னதித்தெரு பகுதி குடியிருப்பு பகுதியாகும். மேலும் இச்சாலையினை ஒட்டி அரசு பெண்கள் தொடக்கப்பள்ளி மற்றும் வழிப்பாட்டு ஸ்தலங்கள் அமைந்துள்ளது. இதே போன்று நரிக்கல் சாலையினை ஒட்டியும் குடியிருப்புகள், கல்வி நிறுவனம் மற்றும் வழிப்பாட்டு ஸ்தலங்கள் அமைந்துள்ளது. இச்சாலைகள் நெடுஞ்சாலைத் துறைக்கு சொந்தமானது இல்லை. நகராட்சியாலேயே பராமரிக்கப்பட்டு வருகிறது. இச்சாலைகளின் வழியாக கனரக வாகனங்கள் வந்து செல்கின்றதால் பொதுமக்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு பாதுகாப்பற்ற சூழ்நிலை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இவ்விரு சாலைகளின் வழியாகவும், கனரக வாகனங்கள் வந்து செல்வதற்கு ஆட்சேபனை தெரிவித்து சம்பந்தப்பட்ட துறையினருக்கு கடிதம் அனுப்புவதற்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.tpi/1442/2015)

**தீர்மான எண் : 1254 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 30**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 ஆசாத் நகர் பகுதியில் சாலை குறுகலாக உள்ளதால், பொதுநலன் கருதி, அப்பகுதியில் அமைந்துள்ள வடிகால் ஓடையில் மூடு சிலாப் அமைத்து சாலையை விரிவுப்படுத்துவதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.2,70,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். இ1/1445/2015)

**தீர்மான எண் : 1255 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 31**

இந்நகராட்சி அம்மா உணவக கட்டிடம் திறப்பு விழா கல்வெட்டு அமைக்கவும், விலைப் பட்டியல், கை கழுவும் இடம், சமையலறை, டோக்கன் வழங்கும் இடம் போன்ற விளக்க ஸ்டிக்கர்கள் ஒட்டவும், அம்மா உணவகத்தில் ஈ மொய்க்காத வண்ணம் Pesto Flash கருவி பொருத்துவதற்கும் மற்றும் துறைமுகத்தெரு வெற்றித்தூண் பூங்காவில் திறப்பு விழா கல்வெட்டு அமைக்கவும் ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.24,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1455/2015)

**தீர்மான எண் : 1256 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 32**

இந்நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு, மாதாகாலனி மற்றும் சிங்காரவேலர் காலனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகங்களை சுற்றிலும் பாதுகாப்பு சுவர் இல்லாமல் உள்ளதால், இரவு நேரங்களில் குடிநீர் நிரம்புவதை பார்வையிடுவதற்கு சிரமமாக உள்ளதோடு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு பாதுகாப்பற்ற நிலையும் ஏற்பட்டுள்ளது. எனவே குடிநீரின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மேற்படி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி வளாகங்களை சுற்றிலும் Chain link fencing மற்றும் Gate அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.70,000/–க்கும், மேற்படி பணியினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். இ1/1456/2015)

**தீர்மான எண் : 1257 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 33**

இந்நகராட்சி கணனி பிரிவில் பொருத்தப்பட்டுள்ள Air conditioner–களில் Compressor மற்றும் Condensor ஆகியவை பழுதடைதுள்ளதால், சர்வர் மற்றும் கணனிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு, அவசர அவசியம் கருதி, மேற்படி பழுதுகளை சரி செய்வதற்காக நேரடியாக பெறப்பட்டுள்ள உள்ளூர் விலைப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | | |
|---|---|---|---|
| 1 | M/s. K.S.N.Cool Service<br>Mahathanapuram | 1) Samsung make<br>2 TR Hi Wall<br>Split A/c.<br>2) L.G. Make<br>1.5 TR Hi wall<br>Split A/c. | ரூ.<br>22,600/–<br><br>11,950/– |
| | | Total | 34,550/– |
| 2 | M/s.Sky Cool Air Condioners,<br>Nagercoil. | 1) Samsung make<br>2 TR Hi Wall<br>Split A/c.<br>2) L.G. Make<br>1.5 TR Hi wall<br>Split A/c. | ரூ.<br>19,100/–<br><br>10,700/– |
| | | Total | 29,800/– |
| 3 | M/s. M.D.Engineers<br>Nagercoil. | 1) Samsung make<br>2 TR Hi Wall<br>Split A/c.<br>2) L.G. Make<br>1.5 TR Hi wall<br>Split A/c. | ரூ.<br>21,400/–<br><br>11,700/– |
| | | Total | 33,100/– |

மேற்காணும் மூன்று விலைப்புள்ளிகளில், M/s.Sky Cool Air Condioners,Nagercoil நிறுவனத்தின் குறைவான விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும், அதற்கான செலவுத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** : சர்வர் மற்றும் கணனிகளின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண். அ2/544/2006)

**தீர்மான எண் : 1258 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 34**

இந்நகராட்சியில் அம்மா உணவகம் 25.05.2015 முதல் செயல்பட்டு வருகின்றது. அரசாணை எண்.79, நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள் 31.05.2014–ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி உணவகத்திற்கு தேவையான தயிர், அரிசி, எரிவாயு, சமையல் பொருட்கள் ஆகியவைகளுக்கான செலவினங்கள் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அதன் விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பொருள்கள் விவரம் | செலவிடப்பட்ட தொகை விபரம் ரூ. |
|---|---|---|
| 1 | அரிசி | 3,660/– |
| 2 | சமையல் பொருட்கள் | 1,27,931/– |
| 3 | தயிர் | 28,125/– |
| 4 | காய்கறிகள் | 49,104/– |
| 5 | எரிவாயு | 24,956/– |
| 6 | பணியாளர்கள் ஊதியம் | 21,000/– |
| | மொத்தம் | 2,54,776/– |

**அ.குறிப்பு** : மன்றம் பதிவு செய்யலாம். (ந.க.எண். அ1/1177 /2015)

**தீர்மான எண் : 1259 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 35**

இந்நகராட்சிக்கு சொந்தமான லியோன் நகர் உரக்கிடங்கில் குப்பைகள் நிறைந்துள்ளதால், தொடர்ந்து குப்பைகளை கொட்ட இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பொது சுகாதார நலன் கருதி JCB மற்றும் Hitachi வாகனங்கள் மூலம் குப்பைகளை அகற்றி, சுத்தம் செய்வதற்காக ரூ.62,000/– க்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, பணியின் அவசர அவசியம் கருதி, இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று 26.06.2015 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு :

| | | |
|---|---|---|
| 1. | திரு. :சூசை மிக்கேல்,<br>கயத்தன்கரை,<br>சகாயநகர் அஞ்சல். | மதிப்பீட்டைவிட 7.81 % அதிகம். |
| 2. | M/s.S.S.R.& Sons,<br>Prop.S.Leslin Babu,<br>Mini Lorry Service,<br>Chemmankal. | மதிப்பீட்டு விகிதம். |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s.S.S.R.& Sons, Chemmankal நிறுவனத்தின் மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு** :

(1) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி, மதிப்பீட்டுத் தொகை ரூ.62,000/–க்கு இந்நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(2) M/s.S.S.R.& Sons, Chemmankal நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று, பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். எச்1/1233/2015)

**தீர்மான எண் : 1260 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. மதிப்பீடு விகிதத்தை ஏற்று பணி உத்தரவு வழங்கிட தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி

**மேஜை கூட்டப்பொருள்**

**பொருள் எண். 1**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு காய்ச்சல் நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள முதிர் கொசுக்களை அழிப்பதற்கு பயன்படுத்தப்படும் 2% பைரித்ரம் இருப்பில் குறைவாக இருப்பதால் பொது சுகாதார நலன் கருதி 100 லிட்டர் பைரித்ரம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவு ரூ.1,20,000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** பொது சுகாதார நலன் கருதி மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.எச்1/1460/2015)

**தீர்மான எண் : 1261 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண். 2**

குளச்சல் நகராட்சி பகுதியில் தற்போது பெய்த பெருமழையினால் ஏ.வி.எம். கால்வாய் முழுவதும் நிரம்பி கொட்டில்பாடு, அந்தோணியார் காலனி, ஜே.பி. காலனி, சாம்பசிவபுரம் போன்ற பகுதிகளில் அமைந்துள்ள குடியிருப்புகளுக்குள் கால்வாய் நீர் சென்றுவிட்டது. ஏ.வி.எம். கால்வாய் முழுவதும் அடைப்புகள் (Silt) நிரம்பியுள்ள காரணத்தினாலும், புல் புதர்கள், பாசிகள் மற்றும் ஆகாயத் தாமரைகள் போன்ற செடிகள் வளர்ந்து குறுக்கு பாலங்களை அடைத்து விட்டதாலும், மழைநீர் கால்வாய் வழியாக செல்ல முடியாமல் குடியிருப்புகளுக்குள் சென்று விடுகிறது. இதனால் 27.06.2015 அன்று பொதுமக்கள் நகராட்சி அலுவலகத்தில் நேரில் வந்து புகார் தெரிவித்ததன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நேராய்வில், மேற்படி பகுதிக்குள் கால்வாய் நீர் உட்புகுந்துள்ளதால் துர்நாற்றம் மற்றும் தொற்று நோய் பரவும் சூழ்நிலையை தவிர்க்கும் பொருட்டும், பொதுமக்கள் மற்றும் சுகாதார நலன் கருதியும் 27.06.2015 முதல் 29.06.2015 வரை ஜே.சி.பி. மற்றும் கிட்டாச்சி வாகனங்கள் மூலம் மேற்படி பகுதியில் அடைப்புகளை அகற்றும் பணியினை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.25,000/–க்கு இந்நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி செய்து முடித்துள்ளமைக்கும், மேற்படி பணிக்கான செலவுத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அ.குறிப்பு :** பணியின் அவசர அவசியம் கருதி இந்நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி செய்து முடித்துள்ளமைக்கும், அதற்கான செலவுத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.இ1/1473/2015)

**தீர்மான எண் : 1262 – அ.கு. ஏற்று கொள்ளப்பட்டு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.**

(ஒம்) அ.நசீர்,
நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

(உண்மை நகல்)

ஆணையர்(பொ)
குளச்சல் நகராட்சி